**MCOP NO:4235/2025** **DATE: 27.07.2026**

ம.சா : 1

பெயர் : திரு.முருகானந்தம்

த/பெ : திரு.குணசேகரன்

வயது : 54

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969ன் பிரிவு 6ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 27.07.2026ல் பதிவு செய்யப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் 1ம் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 16 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மனுவில் கூறியுள்ளபடியும், சத்திய பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளபடியும் விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. விபத்து என் மகனிற்கு நடந்தது. விபத்து சமயத்தில் என் இளவர் மகன் முதல் வருடம் பி.டெக்.ஏ.ஐ படித்துக்கொண்டிருந்தார். என் மகன் பகுதி நேர வேலை பார்த்துக்கொண்டிருந்தார். அதன் மூலம் மாதம் ரூ.10,000/- வருமானம் ஈட்டி வந்தார். அதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. விபத்து தேதியில் வாகனம் வருவதை கவனிக்காமல் சாலையில் நடந்து சென்றதாலும், அவரின் அஜாக்கிரதையால் தான் என் மகனிற்கு விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு முழுக்க முழுக்க என்னுடைய மகன் தான் என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.